56

உ

கடவுள் துணை.

மலையாள

மாந்திரீக போதினி.

இஃது,

மலையாளவாசி மகான்

பகவதியாப்பிள்ளையவர்கள்

உபதேசப்படி

புரசை, சா-அரங்கநாதமுதலியா ரவர்களால்

சீர்திருத்தஞ்செய்தெழுதப்பட்டு,

மேற்படி

அ. மு. அவர்களால்,

T.18382

சென்னை - சூளை,

T18382

அச்சுக்கூடத்திற்

R004A01

க்கப்பட்டது.

1908.

REGISTERED COPY RIGHT.

இதன் விலை அணா 4.

உ

கடவுள் துணை.

மலையாள

மாந்திரீக போதினி.

இஃது,

மலையாளவாசி மகான்.

பகவதியாப்பிள்ளையவர்கள்,

உபதேசப்படி

புரசை, சா- அரங்கநாத முதலியாரவர்களால்

சீர்திருத்தஞ்செய்தெழுதப்பட்டு,

மேற்படி

பு. சா. அ. மு. அவர்களால்,

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

REGISTERED COPY RIGHT.

இதன் விலை அணா 4.

விளம்பரம்.

இப்புத்தகம் தேவையானவர்கள்(:—) மலையாளம் புக்டிபோ பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்யென்றெழுதினல் உடனே மருதபாலில் அனுப்பப்படும் இதுவுமன்னியில் (மலையாளவயித்தியசாஸ்திரம்) என்னும் நூதனபுத்தகம் அச்சிட்டிருக்கிறது மலையாள அவுஷதங்களும் விற்கப்படுகிறது ஆகையால் யெமக்கு எழிதிபெற்றுக் கொள்ளலாம்.

இப்படிக்கு

மலையாளம் புக்டிபோ

சி. யம். நடராஜமுநலியார், மானேஜர்,

பெரம்பூர் பாரெக்ஸ், மதராஸ்.

உ

கடவுள் துணை.

மலையாள

மாந்திரீகபோதினி.

தெய்வமேதுணை.

மலையாளத்துரு மாந்திரீகமிதை
சிலையுருலிபியெனச் சீமைக்குதவுமார்
கலையுருவெனவொரு தலைதரமதியினில்
மலைதருமகளருள் மதலைமுன்நிற்குமே.

மாந்திரீகத்துக்குறியஇராசிகள்.

பாடப் படிக்கப் பலதொழி லுங்கற்கத்
தேடச் சுகிக்கசிலவழிக்க—மேடம்
கற்கடகச் சிங்கம் கன்னிதுலாத்துக்கல்லா
மற்கடத்துக் குண்டோ மற்று.

மேற்படி ராசியில் பிறந்தாலும் அடியிற் குறித்தபடி கிரகங்களின்-ஆட்சி- யுச்சம்-பார்வை- கேந்திரம்- திருகோணம்- யாதாமொரு வலிவுடன் பிறந்தவனே மாந்திரீகத்திற்குறியவனுவான்.

இலக்கினுதிபதி இருக்கிற ராசிக்குடையவன்-ஆட்சி- யுச்சம்-கேந்திரம்-திரிகோணம்-இப்பேர்கொத்த பதவிகளிலிருக்கப்பிறந்தவன் அவனுடையபருவகாலத்திலேமூலிகைவசியம் - மாந்திரீகவசியம் அரிந்து சித்துப் புருஷனுயிருப்பான்.

இலக்கினுதிபதி- நாலாமதிபதி- பாக்கியாதிபதி இவர்கள் மூன்றுபேரும் ஆராமிடத்தைச் சேர்ந்திருக்க அல்லது ஆறுக்குடையவனேரிய அங்கிசத்திலாவதிருந்தால் அக்காலத்திற் பிறந்தவன் பலவிஷயங்களையும் ஆராய்ச்சிசெய்து லோகப்பிரசித்தனுயிருப்பான்.

ஒன்பதுக்குடையோன் வலிமை பெற்று சுபர்கள் நற்கோள்கள் பார்க்க நின்றால் அக்காலத்திற் பிறந்தவன் தெய்வங்களை இகழாமல் அறிவைச்செலுத்தி ஜெபம்-தபம்-மந்திரம் செய்வதன்னியில் மேலான தபசியென்றும் பேரெடுப்பான்.

ஒன்பதாமிடத்துக்குடையவன் சுபக்கிரகங்களுடனே கூடி கேந்திரம் கோணங்களிலேறி-நட்பு- ஆட்சி- யுச்சம்-பெற்றிருக்குங்காலத்தில் பிறந்தவனுக்கு குருகடாட்சமுண்டாகி ஞானம்-கல்வி - தேவதாபக்தி- தவம்-ஐஸ்வரியம் சகலமும் உண்டாகும்.

பத்தாமடத்துக்கதிபன் பத்திலேயே இருந்து குரு அங்காரகன் மித்திருடன்கூடி பத்தாமிடத்தைப் பார்க்க அக்காலத்திற் பிறந்தவன் மாந்திரீகவாதியும் யோகவானுமாவான்.

நாலுக்குடையவனும் லக்கினத்துக்குடையவனும் பத்தாமிடத்திலிருக்க இவர்களுடனே சந்திரனும் பார்க்கஅக்காலத்திற் பிறந்தவன் கெஜகர்ணம் கோகர்ணம் முதலிய அட்டசித்துக்களும் ஆடுவான்.

நாலுக்குடையவனும் லக்கினத்துக்குடையவனும்ஒரு ராசியிலிருந்து அவர்களுடன் சுக்கிரனவது சந்திரனவது கூடினும் பார்த்தாலும் அக்காலத்திற் பிறந்தவன்விஷவித்தைகளும்விஷமாரணவித்தைகளும்கற்பான்மஹேஸ்வர தெரிசனை பண்ணுவான்.

லக்கினத்துக் குடையவனும் ஏழாமிடத்துக்குடையவனும் ஒரு ராசியில் யிருந்தாலும் அல்லது அந்த வீடு பகைவீடாயிருந்து செவ்வாயும் பார்ப்பானகில் அக்காலத்தில் பிறந்தவன் மாரணவித்தைகள் கற்பான்கிரகங்கள்நின்றவீடுபகையில்லாமல் நட்பாட்சிமாயிருந்தால் மனிதரை வியாதியால் வீழ்த்தியாட்டுகிற வித்தைகற்பான்.

பத்துக் குடையவனும் லக்கினத்துக் குடையவனும் சூரியனுடன் கூடியிருந்தாலும் அவர்களை இராகு பார்த்தாலும் கூடினும் மாந்திரீக வித்தையினலே வெகு திரவியந்தேடுவான், யாகாதிகர்மங்கள் செய்வான்.

பத்தாமிடத்தில் சூரியன்கூடினல் மாந்திரீகத்தொழிலும் குளிகன் கூடினல் ஆசாரவீனமான தொழிலும் கற்பான்.

பத்தாமிடத்ததிபதி ஐந்தாமிடத்ததிபதி இவர்களுடன் வலிவுபெற்ற கிரகங்கள் கூடியிருந்தால் அஷ்டாங்க யோகமுடிப்பான்.

நாலாமிடத்திற்குடையவன் ஒன்பதிலிருந்து அவனை சுபக்கிரகங்கள் பார்த்தாலும் அல்லது கூடினாலும் அவன் அஞ்சன வித்தைகள் கற்பான்.

ஒன்பதாமிடத்தில் சுக்கிரனாவது வியாழனாவதிருந்தால் அவனுக்கு ஞானயோகம் ராஜயோகம் லபிக்கும். தீர்க்காயுசுமுண்டு.

ஆறுமிடத்துக்குடையவன் பாவியாகி கேந்திரத்திலிருக்க அவனை சுபக்கிரங்கள் பார்வையிட்டால் அக்காலத்திற்பிறந்தவன் உலகத்தில் யாவராலும் போற்றிசெய்யப்பட்டு கொடியோருக்குக் கொடியோனாயிருப்பான்.

ஆறுமிடத்தில் இராகு விருந்தால் அவனுக்குவிலங்கு முதலிய மிருகங்ள்பயப்படும் பாம்பு தேள்முதலிய எந்த விடமும்தீண்டாது விஷவித்தையும் சித்தியாகும்.

ஆமென்றசெவ்வாயும் ராகுமாந்தி
அப்பனேரெண்டோனைக் கூடிநிற்கில்
போமென்றபூதலத்தில் பரமன்பூசை
புகழ்பெரியஅய்யனொடு ருத்திரன்ருத்திரி
ஓமென்றஓங்காளி வீரபத்திரன்
ஓதிடுவன்ஆகாச மாடன்தானும்
தாமென்றபோகருட கடாக்ஷத்தாலே
தப்பாமல்செய்திடுவன் சென்மன்தானே.

தாமென்றஅம்புலிக்கு நாலாமாதி
தயவாகலெக்கினத்து நாலோன்தானும்
யேனென்றயெவ்விடத்தில் கூடிட்டாலும்
இதமாகஅசுரகுரு இணங்கிநிற்க
தேனென்றதேவிபரா குர்ச்சைபூசை
திடமாகச்செய்திடுவன் வராகியோடு
கோனென்றகோடியோர்கள் எதிர்நில்லார்கள்
கொற்றவனேவசியனடா கூறுகூறே.

௧-வது
பிரிதிவு சக்கரம்.



௨-வது
அப்பு சக்கரம்.



௩-வது
தேயு சக்கரம்.



௪-வது
வாயு சக்கரம்.



௫-வது
ஆகாய சக்கரம்.

பிரிதிவு சக்கரத்திற்கு.

அட்சரம்-ந, பூதம்-பிரிதிவு, தெய்வம்-பிரம்மா, வடிவு-பாலன், கோணம்-நாற்சதுரம், இடம்-கால், நிறம்-பொன்மை, பீஜாட்சரம்-ஊ, உயிரெழுத்து - அ-யம, பட்சி-வல்லூறு, சுவை-தித்திப்பு, லக்கம்-கம, சத்தி-சரஸ்வதி, சுவாசத்துகை-கரு-விரல், ரிஷி-வதிஷ்டர், நாழிகை-கஉ.

அப்பு சக்கரத்திற்கு.

அட்சரம்-ம, பூதம்-விஷ்ணு, வடிவு-பாலன், கோணம்-எட்டாம்பிறை, இடம்-வயிறு, பீஜாட்சரம்-கிலியும், உயிரெழுத்து-இ-வம, பட்சி-ஆந்தை, சுவை-துவர்ப்பு, லக்கம்-கச, தேவதை-லட்சுமி, சுவாசத்துகை-கஉ-விரல், ரிஷி-விசுவாமித்திரர், நாழிகை-கவ.

தேயு சக்கரத்திற்கு.

அட்சரம்-சி,பூதம்-தேயு,தெய்வம்-ருத்திரன், வடிவு அரசன்,கோணம்-முக்கோணம்,இடம்-மார்பு,நிறம்-சிவப்பு, பீஜாட்சரம்-ஸவ்வும், உயிரெழுத்து-உ, பட்சி-காகம், சுவை-உவர்ப்பு, லக்கம்-கஅ, சத்தி-கவுரி, சுவாசத்துகை-அ-விரல், ரிஷி-போதாயனர், நாழிகை-கவ.

வாயு சக்கரத்திற்கு.

அட்சரம்-வ, பூதம்-வாயு, தெய்வம்—மகேசன், வடிவு-மூப்பு, கோணம்-அறுகோணம், இடம்-கழுத்து, நிறம்-நீலம், பீஜாட்சரம் - ஸ்ரீயும், உயிரெழுத்து - எ-யம, பட்சி-கோழி, சுவை-புளிப்பு, லக்கம்-சு, சத்தி-மகேஸ்வரி, சுவாசத்துகை-ச-விரல், ரிஷி-காசிபர், நாழிகை-முக்கால்.

ஆகாய சக்கரத்திற்கு.

அட்சரம்-ய, பூதம்-ஆகாயம், தெய்வம்-சதாசிவன், வடிவு-மரணம், கோணம்-வட்டம், இடம்-தலை, நிறம்-படிகம்,பீஜம்-ரியும், உயிரொழுத்து-ஒஹம, பட்சி-மயில், சுவை-கைப்பு சத்தி-மனோன்மணி,சுவாசத்துகை-ஒருவிரல்ரிஷி,-பாரத்துவாஜர், நாழிகை-உ,

ஓம்.

கணபதி மூலமந்திரத்தில்

1-வது

ஆதிகணபதி மூலமந்திரம் வசியம்.

விபூதியை உத்தூளிதமாய் அணிந்து கலேஆசனத்தின் மீது வடமுகமாயிருந்து வாசிகூடி புருவநடு கற்பூரதீபம் பார்த்து உருத்திராக்ஷமணியால் (சிவ-சிவா, ஓம், றீங், அங்) என்று தினந்தோறும் (கூஅ) உருச்செய்துவர நினைத்த காரியமெல்லாம் சித்தியாகும் அண்டாண்டங்களும், தேவர்கள், முனிவர்கள், அடங்காத பேய்பூதங்கள் மிருகங்கள் பட்சிகள், அஷ்டநாகங்கள் வசியமாகும்.

2-வது

மகாகணபதி மூலமந்திரம் வசியம்.

கிழக்குமுகமாய் வெண்புலித் தோலாசனத்திலிருந்து துளசிமணியால், ஓம், கிலி, சிங், என்று தினந்தோறும் (கூஅ) உருச்செய்துவர மகாகணபதி பிரசன்னமாவர், சகலநோய், விஷம், காட்டேறி, பிசாசு, கணங்கள், தேவதைகள், நதிகள், உன்சமுகம் கண்டால் வீரடங்கிமோகிக்கும்.

3-வது

நடனகணபதி மூலமந்திரம் தம்பனம்.

மேற்குமுகமாய் தெற்பை ஆசனமீதிருந்து தாமரை மணியால் (ஓம்-ஸ்ரீ-கிலி) என்று தினந்தோறும் (கூஅா) உருச்செய்துவர துஷ்ட மிருகங்கள், காற்று, நெருப்பு, தண்ணீர் தம்பித்து நின்றுவிடும்.

4-வது

சத்திகணபதி மூலமந்திரம் உச்சாடனம்.

படந்தாழாசனமேற்கொண்டு சங்குமணியால் (ஓம்-கிலி-சவ்,) என்று நாள்தோறும் (கூஅ) உருசெபித்துவர, கண்டதெல்லாம் உச்சாடிக்கும், நோய், விடம், பில்லி, சூனியம், காணுதோடும், சகலசித்தும் விளையாடலாம்.

வாலைகணபதி மூலமந்திரம் ஆகருஷணம்.

பட்டுவஸ்திரந்தரித்துவடகிழக்குமுகமாயிருந்து, படிகமணியால் (ஓம்-றீங்-கிலி-) என்றுநாடோறும் (௲அ)உருச்செபித்துவர சகலவினைகளும், அடங்காத சகலவிஷங்களும் நீங்கும்.

உச்சிட்டகணபதி மூலமந்திரம் வித்து ஏடணை.

வெண்வஸ்திரந்தரித்து, தென்மேற்கு முகமாயிருந்து, பவளமணியால் (ஓம்-ஸ்ரீ-ரீம்) என்று நாள்தோறும் (௲அ) உருச்செபித்துவரில், சகலகாரியங்களுஞ் சித்தியாகும் பெண்களுக்கு விபூதிகடாட்சித்துவரக்கருப்பமுண்டாம், தொட்டதெல்லாம் ஒன்றுபத்தாய் விளையும் வளரும்.

உக்கிரகணபதி மூலமந்திரம் மாரணம்.

தென்கிழக்குமுகமாய்வேங்கைத்தோலாசனமீதிருந்து எட்டிமணியால் ஓம்-றீங்-நசி என்றுதினந்தோறும் (௲அ) உருச்செபித்துவர சகலபிணியுந்தீரும், சத்துருவின்பேரை நினைந்து உருசெபித்துவர அவன்தேகத்தில் அக்கினிமீறி மாண்டுவிடுவான்.

மூலகணபதி மூலமந்திரம் பேதனம்.

வடமேற்குமுகமாய் கிருஷ்ணாசனம் (மான்தோல்) மீதிருந்து மிளகுமணியால் ஓம், றீங், அம், என்று (௲அ) உருதினந்தோறுஞ் செய்துவந்தால் மந்திரஞ் சித்தியாகும்பிணியாளற்கு விபூதிகடாட்சிக்க பிணிகள்தீரும் சுரம், தோஷம், வீக்கம் நீங்கும், உருவம் பலவிதமாய்த்தோற்றும்.

அஷ்டகணபதியுமொன்றாய் நின்றமூலமந்திரம்.

ஓம்-கிலி-அங்-உங்-என்று (௲அ) உருவேற்றி விபூதி போட, சுரம், சன்னி, குன்மம், காசம், வஞ்சினை, ஏவல், பில்லி, சூனியம், விஷம், தோஷம், கரப்பன், கருப்பரோகம் வயிற்றுத்திரகூஷி கட்டி நீங்கும்.

மேற்கூறிய அஷ்டகணபதி மூலமந்திரங்களை (௱௲) உருவேற்றிக்கொண்டாலவை சித்தியாகும்.

பஞ்சபூத தேவதைகளின்
மந்திரதியானச்சித்து.

பிரம தியானம்.

நாற்கோணத்துள் விந்து, விந்து நடு ஓங்காரம் ஓங்காரத்தடி நம், நங், கிலி, ரீங், என்று எழுதி, அந்த மந்திரத்தால் உருச்செய்ய, பிரமா சரசுவதி தரிசனமாம், சகலசித்துமுண்டாம், புத்திரசந்தானமுண்டாம்.

விஷ்ணுதியானம்.

மூன்றும்பிறைகோணநடுவிந்துவிட்டு ஓங்காரக் கவசஞ் சாற்றி விந்துநடுமங், மங், சிரீங், ரீங், சிம் என்றுவரைந்து, நடுவெழுத்தைப் பிடித்துத் தியானிக்க விஷ்ணு, லட்சுமி, கடாட்சமுண்டாம், சகலமும் வசியமாம்.

உருத்திர தியானம்.

முக்கோணநடு விந்து, விந்துநடு-சிரீ, சிம், கிலி எழுதி அந்தமந்திரத்தைத்தானே கடதலையாய்மாறிச்செபிக்க மூல அனல் மேலேசாடி சுழினைக்கேகி ஜோதிபோற் பிரகாசிக்கும், சகலபீடைகளும், விலகும், எதிரியைநோக்கிச் சினந்தாலவன் மாண்டுபோவான்.

வேறு.

முக்கோணத்துள், சிம், அங், ரீங், என்று விபூதியில்வரைந்து மானதமாய்ப் பூசித்து அந்த விபூதியைக் கடாட்சித்தாலும், அல்லது எந்திரமெழுதிக்கட்டினாலும், சுரம், வயிற்றிலுள்ளகட்டி மற்றப்பீடைகளும் விலகும்.

வேறு.

விபூதியில் அம், சிங், கிலி, என்று எழுதித்தியானித்து அந்தவிபூதியைக் கடாட்சிக்க பிசாசு, பித்தம் நீங்கும்.

மகேசுவரதியானம்.

அறுகோணத்தில் ஓம்-சிவயநம-என்றும் அதினடுவில், வங்-ரீங்-சிம்- என்றும் வரைந்து ஓம்சிவாயநமா வென்று தியானித்து விபூதிபோடச் சகலபீடைகளும் விலகும்.

க்ஷ கோணத்தில் சடாட்சரத்தையும் அதினடுவில், ஐம்-கிலி-சவ்-என்றும் பதிந்து கோணமுனைகளில் சூலமிட்டு க்ஷ மந்திரத்தாலேயே மானதமாய்த் தியானித்து ஏந்திரத்தை கையிற்கட்டி விபூதிகடாட்சிக்க உடலிலுள்ளவெக்கை, நீரிழிவு முதலான வியாதிகள் விலகும்.

சதாசிவதியானம்.

விந்துநடு- பிரணவம் பிரணவநடு- யங்- யங்- சிம்- சிவ என்று வரைந்து வாசிகூடி உருவேற்றி விபூதிபோடச் சகல பீடைகள் விலகும்.

வேறு.

விபூதியில் விந்து நடு அங்-கிலி-சங்- என்று வரைந்து மானதமாய்ப் பூசித்து விபூதிகடாட்சித்தாலும்- ஏந்திரமெழுதிக் கையிற்கட்டினாலும்- வியாதிகள் விலகும்.

வேறு.

பிரணவத்தின் நடுவே விந்தும்- விந்து நடுவே அங்-ரங் நங்-சிங்-என்றும் வரைந்து (௱) உருச்செய்து ஏந்திரம் கையிற்கட்ட பிசாசு- பிரமராக்ஷதை விலகும்.

வேறு.

விபூதியில் விந்து அதினடுவில்- அம்-சிங்-கிலி-மனக்கண்ணால் எழுதி மானதமாய்த்தியானித்து விபூதிகடாட்சிக்க- பிசாசு-பித்துப்பிணிகள் தீரும்.

பஞ்சபூத தேவதைகள் தியானமுற்றிற்று.

அஷ்டகரும

மந்திரச்சித்து மகிமை.

தம்பனம்.

தேகசுத்திபண்ணி விபூதிஉத்தூளிதமாய்ப்பூசி இந்திரன் திசையைநோக்கி புலித்தோல் ஆசனத்திருந்து புருவநடுசோதியைமனக்கண்ணால்நோக்கி, கமலமணியால், (நமசிவய) வென்று மாறித்தியானித்து உருவேற்ற, கொடியமிருகங்கள், அஷ்டநாகங்கள், வியாதிகள் தம்பித்து விலகும் தம்பனத்துக்குத்தகடு தாம்பிரம்.

மோகனம்.

அக்கினி திசையைநோக்கி கலைத்தோல் ஆசனத்திலிருந்து (சிவயநம)வென்று மாறி பவளம்அல்லது மிளகுமணியால் உருவேற்ற சகலமும் மோகிக்கும். திருமாது அகலாதிருப்பள் இதற்குத்தகடு தங்கம்.

வசியம்.

வடகிழக்குமுகமாய் பங்கய ஆசனத்தின்மீதிருந்து பூரணத்தில் மனதை நாட்டி உருத்திராக்ஷமணியைக் கையில்வாங்கி (நயமவசி) யென்று மாறி உருவேற்ற உலகத்தில் மனுமுதலாகிய ஜீவஜெந்துக்கள் வசியமாகும் இதற்குத்தகடுகாரீயம்.

மாரணம்.

தென்முகமாய் அத்திப்பலகைமீதிருந்து நாவிமணியால் சுழினையில் நாட்டமுற்று (நசிமயவ) என்றுமாறி உருச்செபிக்க வல்வினையும் வியாதிகளும் அகலும் சத்துருக்கள் எடுபட்டு ஓடி நசித்துப்போவார்கள் இதற்குத்தகடுவெள்ளி.

உச்சாடணம்.

நிருதிமுகமாய் மான்தோல் ஆசனமீதிருந்து துளசிமணியால் (மசிவயந) வென்றுமாறி சுழினைநடுகற்பூர தீபம் பார்த்து, சேவித்து விபூதி கடாட்சித்தால் தீமைசெய்யும் பாவிகளும் வியாதிகளும் மாரணமாம் கண்ட பொருள்களையெல்லாம் உச்சாடிக்கும் இதற்குத்தகடு வெள்ளீயம்.

ஆகருஷணம்.

மேற்குமுகமாய் தெற்பை ஆசனமீதிருந்து சோதியைப்போற்றி சங்குமணியால் (நசிவயம)என்றுமாறி உருச்செய்ய நினைத்தவண்ணம் ஆகருஷணமாம் இதற்குத்தகடு குடவன்.

வித்து ஏடணை.

வடமேற்கு முகமாய் ஆசனிப்பலகை மீதிலிருந்துஎட்டிமணியால் (மயவநசி) என்று மாறித்தியானிக்க பிரமை, பில்லி, சூனியம், விலகும் குருத்தோலையில் மாறி எழுதிக்கட்டவும் வித்தெடுத்துபூமியில் ஊன்ற உடனே முளைத்துச்செடியாகி பூத்துக்காய்க்கும்.

பேதனம்.

குபேரன் திசையைநோக்கி தேவதாரப்பலகை மீதிருந்து முத்துமணியால்(நயவமசி)யென்று மாறிச்செபிக்க சகலமும் பேதனமாம் வியாதிகள்விலகும் பாரிலுள்ளோர்பணிவார்கள் இதற்கு தகடு இரும்பு.

தசதீட்சை அறிந்து சித்திபண்ணிக்கொண்ட பெரியோர்களிடத்திலும் அஷ்டகருமச்சிலையைவைத்திருப்பவர்களிடத்திலும் அஷ்டசித்தாடும்.

வேறுவகை

அஷ்டகரும மந்திரச்சித்து.

தம்பனம்.

விபூதியை உடம்புமுற்றுமணிந்து ஆலம்பலகைமீது புலித்தோல்விரித்து கன்னிமுகமாயிருந்து புருவநடுச்சுழியைநோக்கி வாசிகூடி பரமசிவத்தை நினைந்து (ஓம்-கிலி-நமசிவய) வென்று மௌனமாய் தாமரைமணியால் உருச்செய்ய தம்பனம்சித்தியாகும் விஷம் வியாதி மிருகங்கள்விலகும்

மோகனம்.

மாம்பலகைமீது கலைத்தோல்போட்டு வடமுகமாயிருந்து துளசிமணியால் (ஓம்-சவ்-மசிவயந)வென்றுஉருவேற்ற சகலஜீவஜெந்துக்களும் மோகித்து வணங்கும்.

மாரணம்.

அத்திப்பலகையின்மீது மாங்தோலாசனம்விரித்து வாயுமுகமாயிருந்து நாவிமணியால் (ஓம்-ஐயும்-சிவயநம) வென்று தியானிக்க மாரணம் சித்திக்கும் தீங்குகள் விலகும்.

உச்சாடணம்.

பிலாப்பலகைமீது பத்மாசனம்விரித்து வாயுமுகமாயிருந்து மதியை ரவியிற்சேர்த்து சுழினைக்கேற்றினாலங்கே சோதிபிரகாசிக்கும் அந்தச்சோதியை மனக்கண்ணாற் பார்த்து (ஓங்-யங்-வயநமசி)யென்று பவளமணியால்உருவேற்ற உச்சாடணம் சித்தியாகும் வல்பிணிகள்விலகும் நினைத்தபடி உச்சாடிக்கும்.

வசியம்.

வில்வலப்பலகைமீது புல்வாய் ஆசனம் விரித்து, கிழக்குமுகமாயிருந்து உருத்திராக்ஷமணியால் ஓம்-யங்-யநமசிவ-என்று செபிக்க வசியம் சித்தியாகும் சகலஜீவஜெந்துக்களும் வசியமாகும் வணங்கும்.

ஆகருஷணம்.

தேவதாரப்பலகைமேல் மாங்தோல்போட்டு ஈசானமுகமாய் இருந்து பளிங்கிமணியால் ரங்-நசியமவ-என்று தியானிக்க அழைப்பு சித்தியாகும் லட்சுமி கடாட்சமுண்டாம் நினைத்ததை யழைக்கலாம்.

பேதனம்.

தில்லைப்பலகைமீது கருப்புக்கம்பளம்விரித்து தென்முகமாயிருந்து முத்துமணியால் (ஓம்-உங்-வநசியம)என்று உருச்செய்ய பேதனஞ்சித்தியாகும்காலன்அஞ்சிவிலகுவன் சகலமும் பேதனமாம்.

வித்துவடணை.

பாதிரிப்பலகைமீது புலித்தோல்விரித்துசங்குமணியால் (ஓம்-டம்-மசியநவ) என்று உருச்செய்ய பூலோகத்தரசர் வணங்குவார்கள் போட்டவித்துக்கள் நன்றாய் முளைத்து நல்லபலன் கொடுக்கும்.

வேறுவகை

அஷ்டகருமசித்து மகிமை.

கிழக்குமுகமாய் தனக்குவேண்டிய ஆசனத்திருந்து இரேசித்துக் கும்பித்து, மனதையொரு நிலைப்படுத்தி(மசி, மசி) என்று லெட்சம்உருச்செய்ய புருவநடு ஜோதி பிரகாசிக்கும், அவமிருத்து விலகும்.

தென்கிழக்கு முகமாயிருந்து (வசிவசி) என்று முன் போல உருச்செபிக்க வாசிவலஞ்சென்று, முடிமேலேகி, சோதிபிரகாசிக்கும், கூத்துவன் விலகுவன்.

தென்திசை முகமாயிருந்து (நசி-நசி) யென்று முன் போல உருவேற்ற வாசி அண்டத்தேகி அக்கினிச்சுடர் போல சுழிமுனையில் பிரகாசிக்கும் தீங்குசெய்யும் பாவிகள் மதிகுலைந்து தீராத வல்பிணியால் திகைத்து நிற்பர்களாம்.

கன்னிமுகமாயிருந்து புருவநடு மனக்கண்ணுட்டி (வங் சிங்) என்று உருவேற்ற சுழிமுனையில் சத்திரூபமாய் மரகதம் போற் பிரகாசிக்கும், பஞ்சசத்திகளின் கடாட்சமுண்டாம்.

மேற்குமுகமாய்க் கும்பகத்திலிருந்து (அவ்-அவ்) என்று உருவேற்ற கண்ணுக்கனேகங் காட்சிகள்தோன்றும்.

வடமேற்கு முகமாயிருந்து, (சிவ-சிவ) என்று உருச்செய்ய அரன்கிருபையுண்டாம் கன்மவினைகள் தீரும்.

வடதிசையைநோக்கி (மங்-மங்) என்று உருவேற்ற உலகெல்லாம் நிறைந்தசோதிகாணும், விந்துகட்டி மணிபோற் றிரளும் கவனசித்தியுண்டாம்.

வடகிழக்குத் திசையைநோக்கி (நங் மங்)என்று உருச்செய்ய சுழிமுனையில் தீபங்காணும் நோய்களெல்லாம் பரிதிகண்டபனிபோல விலகும்.

நீலகண்டமந்திரம்

அஷ்டகரும மந்திரச்சித்து மகிமை.

புறேம், நிறீம், டம், என்ற மூன்று பதங்களும் நீலகண்ட மந்திரமாம்.

நீராடிபட்டுவஸ்திரம் தரித்து உத்தூளிதமாய் விபூதியணிந்து மேற்படி மந்திரத்தால் கரநியாசம், அங்கநியாசம் செய்து, புறேம் ஆத்மதத்துவ தூலசரீரயாமிசுவாகா, நிறீம் சூட்சும சரீரயாமி சுவாகா, டம் காரண சரீரயாமிசுவாகா வென்று தியானித்து நித்தியகரும அனுஷ்டானம் முடித்துக்கொள்ளவும்.

தம்பனம், மோகனம்.

நீலகண்ட மூர்த்தியையும் தன்னையும்பொன்னிறமாகப் பாவித்து இடதுகையில் விபூதியை நிரத்தி, அதில் பிருதிவிச் சக்கரத்தையும் அதின் நடுவிந்தும், விந்துநடு லம், புறேம், என்ற பதத்தையும் எழுதி அந்தமந்திரத்தால் தியானித்து விபூதி கடாட்சிக்க, விஷம், பூதம், வியாதிகள் தம்பித்து விலகிப்போம்.

எதிரிமுகத்தில், மனக்கண்ணால், ஷெ சக்கரத்தையும் அதினடு (லம், டம்) என்ற அட்சரங்களையும் ஒட்டிச் செபிக்க அவனுடைய நாக்கு தம்பித்துப்போம்.

ஆகருஷணம்.

சுவாமியையும், தன்னையும்,வெண்ணிறமாகப்பாவித்து, விபூதியில் அப்பு சக்கரத்தையும் அதினடுவில் (வம், புறேம்) என்ற அக்கரங்களையும் வரைந்துசெபித்து விபூதி போட பூதம், பிசாசு, விஷம் விலகும்.

வசியம்.

சுவாமியையும், தன்னையும், சிவந்தவன்னமாகப்பாவித்து விபூதியில் தேயு, சக்கரத்தையும் அதினடு (கிலிம்,புறேம்) என்ற அட்சரங்களையும் நாட்டித்தியானிக்க சகலமும் வசியம்.

வித்து எடணே.

சுவாமியையும், தன்னையும்,காளகண்டராய்ப்பாவித்து விபூதியில் பிருதிவு சக்கரத்தையும் அதினடு (றம்-யம் புறேம்) என்ற அக்கரங்களையும் நாட்டித்தியானிக்க வித்து எடணேயாம்.

உச்சாடணம்.

சுவாமியையும் தன்னையும்புகைநிறமாகப்பாவித்துவிபூதியில் வாயுச்சக்கரமும் அதினடு (யம-புறேம்) என்ற அக்கரங்களையும் வரைந்து தியானிக்க உச்சாடணமாம்.

ஆகாய ஆகருஷணம்.

சுவாமியையும் தன்னையும் நீலநிறமாகப்பாவித்து விபூதியில் ஆகாயச்சக்கரத்தையும்அதினடு (ஹம்-புறேம்)என்ற அக்கரங்களையும்நாட்டிச்செபிக்க சகல பூதம்,பேய்,பிணிகள் விலகிப்போம்.

அஷ்டகருமவகைகள்முற்றிற்று.

வேறுவகை

நீலகண்ட மந்திரமகிமை.

நீலகண்ட அஷ்டகரும ஆரம்பத்தில் சொல்லிய நியமத்துடன் தன்னை பாலவன்னமாய், காளகண்டமாய், சதுர்புயமாய், பாவித்து, (புறேம்-நீறீம்-உம்) என்று (௱௲) உருச்செபித்துக்கொள்ள அந்தமந்திரஞ் சித்தியாகும்.

மேற்படி மந்திரத்தை விபூதியில்நாட்டி (௱அ) உருசெபித்து அந்த விபூதியை கடாட்சிக்க சுரந்தீரும்.

மேற்படி மந்திரத்தை வேப்பிலையில் மனக்கண்ணால் ஒட்டி (௱அ) உருசெபித்து அந்தக்குழையினால் மந்திரிக்க, வீக்கந்தீரும்.

மேற்படி தழை, விபூதி, மண், தண்ணீர் இவைகளிலெதிலாவது ஷெ மந்திரத்தில் முதல் பதத்தைக் கண்ணால் வரைந்து அதைச்சிரசுமுதல் பாதம்வரை தடவச்சுரந்தீரும்.

ஷெ முதல் பதத்தை எண்ணெயிலாவது விபூதியிலாவது எழுதி உருசெபித்து வீக்கம், கட்டி, சிலந்தி முதலான வியாதிகளுக்குத் தடவத்தீரும்.

சுரமுடையவனின் சிரசில் ஷெ முதல் பதத்தை மனக்கண்ணால் வரைந்து தியானித்து அவனைத்தடவி, மரம், மனிதர், மிருகங்கள், மற்றெவைகளின் பேரிலாவது தடவ அங்கேபாயும்.

௸ மூன்றுபதத்தையும், ஆவின்நெய், பால், நீர், நல்லெண்ணெய் இவைகளில் எதிலாவது நாட்டி (ந ா) உருசெபித்து ஒருமண்டலம் சாப்பிட்டு வரும்படிசெய்தால் மலடிக்கிக் கருப்பமுண்டாகி ஆயிசுடன் குழந்தைபிறக்கும்.

ஆவின்நெய், பால், தேன் இம்மூன்றையும் சமன்கலந்து அதிலாவது, பசுவின்பாலில் சந்தனத்தைக்கலந்து அதிலாவது.-தண்ணீரிலாவது, அன்னத்திலாவது ௸ மந்திரத்தை எழுதி தினம் (ந ா) உருச்செபித்து நீலகண்டமூர்த்தியைச் சிந்தித்து, ஒருமண்டலம் இரண்டுமண்டலம்வரை கொடுத்துவர பிள்ளை இடையிலே விழுதலும், சாப்பிள்ளையே பெறுதலும்நீங்கிப் பூரணகருப்பமாகி ஆயிசுடன் குழந்தை பிறக்கும்.

புரசபத்திரத்தில் பிருதிவிச்சக்கரத்தையும், அதினடுவில் மூன்றும் அச்சரத்தையும் நாட்டி பொன், வெள்ளி, தங்கத்தகட்டில் அந்தப்பத்திரத்தை வைத்துப் பொதிந்து கன்னிநூல் கயிற்றினால் கழுத்திலாவது, கையிலாவது கட்டினால் சுகப்பிறசவமுண்டாம் உலர்ந்ததேகம் பூரிக்கும், தன்னியம் பெருக்கும் கருப்பமுண்டாம் மூலமத்திரத்தைத்தியானித்து தினம் விபூதிதரித்துக்கொள்ளவும்.

விபூதியில் இரண்டாம் அட்சரத்தைவரைந்து அந்தவிபூதியை, தினம் அந்திசந்தி மூன்றுமாதம்வரை மெய்யிற்றரித்துவர புத்திரசந்தானமுண்டாம்.

விபூதியில் பிருதிவிச்சக்கரமெழுதி அதினடு பிரணவத்தைநாட்டி அந்தப் பிரணவத்தினடு இரண்டாமட்சரத்தை வரைந்து, அந்தமந்திரத்தால்(கூ அ)உருசெபித்துஅந்தவிபூதியைத் தினந்தோறும் ஒருமண்டலம் பூசிக்கொள்ள புத்திர சந்தானமும், செல்வமுமுண்டாம்,பலவிதமாய்க் கனாக்காண்பதும் நீங்கும்.

புரசபத்திரத்தில், பிருதிவுசக்கரமும் அதினடு இரண்டாம் மூன்றும் அக்கரங்களையும்நாட்டி, பிரணவத்தை சுத்திக்கட்டி அதற்கு, கந்த, புஷ்பம்சாற்றி சோடச உபசாரஞ் செய்து பூசைபண்ணி (கூ அ) உரு அந்தமந்திரத்தால் செபித்து அதைக்கன்னி நூலால குளிசமாடி பெண்கள் கழுத்தில், கையில்கட்ட உடல்வெக்கை நீங்கி பூரித்து புத்திரசந்தானமுண்டாம்

பச்சைமஞ்சளை அரைத்து, அதில், பிருதிவுச்சக்கரத்தையும், அதினடு விந்துவையும், அந்தவிந்துநடு, இரண்டாம்

அக்கரத்தையும் எழுதி அந்த மந்திரத்தால் (கூஅ) உருசெபித்து அந்தமஞ்சளை ஒருமண்டலம்வரை மலடிகள் குளித்து வந்தால் புத்திரர்களைப் பெறுவார்கள்.

ஆவின்வெண்ணெயில் இந்தச்சக்கரத்தையும், மந்திரத்தையும், எழுதி இந்தமந்திரத்தால் (கூஅ) உருவேற்றி அந்தவெண்ணெயை ஒருமாதம்வரை அந்திசந்தி சாப்பிடும்படி மலடிகளுக்குக் கொடுக்க நல்லபுத்திரர்களைப் பெற்று இன்பத்தை அனுபவிப்பர்கள்.

புரசபத்திரத்தில் ஓங்காரமெழுதி அதினடு மூன்றும் அக்கரத்தைநாட்டி அந்தமந்திரத்தால் (கூஅ) உருவேற்றிப் பூசித்து, வெள்ளிதங்கத்தகட்டில் அந்தப்பத்திரத்தைப் பொதிந்து குளிசமாடி கையில், கழுத்தில், கட்டிக்கொள்ளதாது வருத்தனையும் சரீரகாந்தியும், ஆரோக்கியமுமுண்டாம்.

நீலகண்டமந்திர முற்றிற்று.

பரமகுருவாகிய நந்தீசர் தியானம்.

அங்-ரீர், சிங்-சிம்-சிவா, என்று புருவநடு தீபம்பார்த்துத் தியானித்தால் அந்தப்பரமகுருவின் அருளுண்டாகி, தேகம் தங்கம்போற் பிரகாசிக்கும், யோகசித்தி, ஞானசித்தியுண்டாம்.

கணபதி தியானம்.

ஓங்காரநடு உங்-ரீங்-சங்-கங், என்று விபூதியிலாவது, தங்கமுதலிய தகட்டிலாவது எழுதி, புருவமேவி, உம்-ரங்-ஓம் ஸ்ரீ, கங், கங், கணபதியே நமா, வென்று தியானிக்கில், தீட்சைமுதலிய மந்திரங்களுஞ் சித்தியாகும், வல்பிணிகள் நீங்கும், சகல ஜீவசெந்துக்களும் வசியமாகும், ஏவல்கேட்கும்.

சுப்பிரமணியர் தியானம்.

புருவநடுச்சுழியைநோக்கி ஓம், கிலி, சிம் என்றுதியானிக்க சுப்பிரமணியர் வடிவேலுடன் சோதிமயமாய்ப் பிரசன்னமாவர் நினைத்தவரமளிப்பர், கன்மவினைகளை விலக்கிவைப்பார்.

வயிரவ தியானம்.

புருவநடுச்சுடரைநோக்கி கிலி-அங்-என்றுதியானிக்க அந்தச்சுடரொளியில், கனகவடிவாய்ச் சிறுகுழந்தையைப் போல் அவர்தோன்றி கேட்டவரமீவர்.

வேல்முருகர் சருவசங்கார திரிஅக்கர மந்திரவிஞ்சை.

ஆகாயச்சக்கரமெழுதி அதற்கு திக்குக்கு ஒன்றுகநாலுசூலமிட்டு அதினடுவில் உச்சத்தில் மகாரமும், நடுவில் சிகாரமும், பிச்சத்தில் நகாரமும், நாட்டி மசிநசி, நசிமசி, என்று (௱௲)உருவேற்ற வினையகலும், காலவிடமகலும்.

ஷை மந்திரத்தை பிரம்பிற்றுக்கி உருவேற்றிக்கொண்டு மௌனமாயுன்னி விபூதியணிந்து சத்துருக்கள் முன்சென்று அந்தப்பிரம்பைவீச அவர்கள் ஓடிப்போவார்கள். விஷந்தீண்டினவனுடைய இருதோளிலும் சிரசிலும் ஷை பிரம்பால் ஷை மந்திரத்தை எழுதித்தட்ட ஆலகாலவிஷமானாலும் இறங்கிவிடும்.

ஷை மந்திரத்தை தங்கத்தட்டில்வரைந்து (௱௲) உருவேற்றி குளிசமாடிச் சிரசிலிருக்க விஷசெந்துக்கள்விலகிப்போம்.

ஷை மூன்று அட்சரத்தையும் முகத்தில் ஒட்டி நித்திரைசெய்யக் கனவுகாணாது, இரவில் விஷதிஷ்டியில்லை.

எண்ணெயில் அருகம்புல் முனையால் ஷை மந்திரத்தை செபித்து வயிற்றில், சிரசில்த்தடவ, வயிற்றில்மரித்த பிள்ளைவிழும் அது சாகாதிருந்தால் சுகமாய் வெளிப்படும்.

சுண்டைக்காய் பருமனுயிருக்கிற கல்லுகளில்மேற்படி மந்திரத்தைச்செபித்து எறிய எதிரிகள் திருடர்கள் ஓடிப்போவார்கள். ஷை கல்லை உருமாலில் முடிந்து அதைச்சிரசில் கட்டிக்கொண்டு வழிநடந்தால் விடஜெந்துக்கள் காலிற்சுற்றிக்கொண்டாலும், மிதிபட்டாலும் விஷமில்லை கடியாது.

ஷை மந்திரத்தை நினைவிலுன்னி கொடியுருச்செய்தவர்களிருக்குமிடத்தில் விஷதிஷ்டியில்லை கடித்தாலும் விஷமில்லை.

ஷை சக்கரமும் மந்திரமும் வரைந்த எந்திரம்சிரசிலிருந்தால், பில்லிசூனியம் விலகும்.

ஷை மந்திரத்தை எண்ணெய், தண்ணீர், பிரம்பில் ஓதி அவைகளிலெதினாலாவது தடவ பிளவை, பரு, படுவன் வீக்கம், குஷ்டம், பெருவியாதி, சுரம் தீரும். கழுத்து,

வாய், செவி, கண், நெஞ்சு, குய்யம், கடிதடம் முதலான இடங்களிலும் உண்டாகும் வியாதிகளும், கண்டமாலை ஷ பிரம்பால் தடவத்தீரும்.

ஷ மந்திரத்தை விபூதி ஜெலத்தில் பிரம்பில் உருவேற்றி அதை அந்திசந்தி உட்கொள்ள பாவவினைகள் நீங்கும் மேற்படி ஜெலத்தை, சிரசில்கொட்டிப் பிரம்பால் தட்ட பேய்-பிசாசு-பிரமராக்ஷதை முதலான துட்டதேவதைகள் ஓடிவிடும் விபூதியை எறிந்தால் தீய்ப்பந்தத்தினுற் சுட்டதுபோல தேகத்தில் காந்தலும் எரிச்சலுமுண்டாகி பேய்பிசாசுகள் அலரியோடும் அதற்கடையாளமாக ஒரு மரக்கொம்பை யொடித்துத்தள்ளும் ஒரு பெருங்கல்லைத் தூக்கிக்கொண்டோடிப் போடச்சொன்னவிடத்திற் போடும் இதோ போகிறேனென்று சர்க்குருமேலாணையிடும்.

பஞ்சகவியத்தில் ஷ மந்திரத்தைச்செபித்து அதை மூன்றுநாள் சாப்பிடச்செய்தால்,குமரகண்டன்முயலகண்டன், காக்கைவலிப்பு, குதிரைவலிப்பு முதலான வலிப்புகளும் நீங்கும் அப்படி நீங்காவிட்டால் உருத்திரகோலமாய்ப்பரமசிவத்தை நினைந்து புருவநடுத்தீபம்பார்த்து வாசியினுல் மேற்படி மந்திரத்தை உருச்செய்து பிரம்பால் சிரசில் அடிக்க மேற்படி வியாதிகள் தீர்ந்துபோம்.

முறத்தின் பின்புரத்தில் விபூதியை நிரத்தி மேற்படி மந்திரத்தைநாட்டி (கூ) உருவேற்றி அந்தவிபூதியை உட்கொள்ளச்செய்து பிரம்பாலடிக்க விடாச்சுரம் விட்டுப்போம்.

காராவின்பால் நெய் தேன் இம்மூன்றையும் ஒன்றாய்க்கலந்து அதில் மேற்படி மத்திரத்தை (கூஅ) உருச்செபித்துக்கொடுக்க உன்மாதந்தீரும் தேனிலந்தப்படி உருவேற்றிக்கொடுக்கத் தாந்திரிகன் முதலிய (கஅ)'வகைச்சன்னிகள் தீரும். ஆவினெய்யில் அந்தப்படி உருவேற்றி மூன்று திங்கள் கொடுத்தாலும் பஞ்சகவியத்தில் ஒருமண்டலங் கொடுத்தாலும் கருப்பமுண்டாம். பச்சைமஞ்சளில் அந்தப்படி உருவேற்றி அந்த மஞ்சளை இரண்டு திங்கள் குளிக்கச்செய்தால் கருப்பமுண்டாம்.

சருவசங்காரவிஞ்சைமுற்றிற்று.

பஞ்சாட்சரவிலக்கணம்.

பஞ்சாட்சரமானது ஓம் என்னும் பதமும் சிவாயநமா வென்னும் பதமும் பொருந்தி ஆறக்கரத்தையுடையதாம்.

இந்த ஓமென்னும் பதத்தின்பொருள் பரமசிவமேயாம். மற்றவைவந்தெழுத்தின்பொருள் அந்தச்சிவத்தின் ஈசானமுதலிய சத்திகளைந்துமாம். இந்தசத்திகளைந்தையும் சிவனுடைய பஞ்சமுகமெனவுங் கூறப்படும் இந்தப்பதங்களாலே அந்தப் பொருளைக்கருதி யுச்சரிக்கில் ஆன்மாக்கள் போகமோட்சமிரண்டையுமடைவார்கள்.

நகாரம் பிருதிவு பிரமபீஜமாகவும், மகாரம் அப்பு மாலின் பீஜமாகவும், சிகாரம் தேயு உருத்திர பீஜமாகவும், வகாரம் வாயு மகேசுவர பீஜமாகவும், யகாரம் ஆகாயம் சதாசிவ பீஜமாகவும், விளங்கும்.।

பஞ்சபூத உடல்சக்கரம்.

பிருதிவுக்கு சதுர்க்கோணம், அப்புக்கு மூன்றும் பிறைகோணம், தேயுக்கு முக்கோணம், வாயுக்கு ஆறுகோணம், ஆகாயத்துக்கு வட்டமாம்.

பஞ்சபூதநிறம்.

பிருதிவுபொன்மை அப்புவெண்மை தேயுசெம்மை வாயு நீலம் ஆகாயம்புகை நிறமாம்

பஞ்சபூத உயிரேத்ழுது.

பிருதிவுக்கு அகாரம்அப்புக்கு இகாரம் தேயுக்கு உகாரம் வாயுக்கு எகாரம் ஆகாயத்துக்கு ஒகாரம்.

பஞ்சபூத பீஜாட்சரம்.

பிருதிவுக்கு லம் அப்புக்கு வம் தேயுக்கு ரம் வாயுக்கு யம் ஆகாயத்துக்கு ஹம்.

பஞ்சபூத விலக்கம்.

பிருதிவுக்கு (௰௧) அப்புக்கு (௰) தேயுக்கு (௮) வாயுக்கு (௰௬) ஆகாயத்துக்கு (௩) ஆகூ விலக்கம் (௫௧).

பஞ்ச சத்திகளின் மகிமை.

இந்தசத்திகளைந்தும் எழுத்தைந்தாகி கலைக்கியானவிஞ்சையாகி இதமகித மிரண்டுக்கும் முன்னேயாகி ஒடுக்கம்

ஏழுவகைத்தோற்றமாகி பூதமைந்துபொறி புலனுமாகி பிஞ்சு காய் பழமுமாகிப் பல்லாயிரங்கோடி அண்டங்களாகியும் நிற்கும்.

ஐந்துமுகம் ஐந்தெழுத்தின் மகிமை.

ஐந்தெழுத்தும் ஒவ்வொன்றிற்கு மிருபத்தைந்தால் நூற்றியிருபத்தைந்து அக்கரமாய்விரிந்து கலைக்கியான விஞ்சையாகும்.

நமசிவயவென்னும் பதத்தின் நடுவெழுத்தைப்பிடித்து மாற சிவயநமவென்ற பதமாகும் அந்தப்பதத்தின் நடுவெழுத்தைப்பிடித்து மாற யநமசிவவென்றபதமாகும் அதின் நடுவெழுத்தைப்பிடித்து மாற வசிவயநவென்ற பதமாகும் அதின் நடுவெழுத்தைப்பிடித்து மாற வயநமசியென்ற பதமாகும்.

இவ்வாறே மசிவயநவென்னும் பதத்தையும் சிவயநமமென்னும் பதத்தையும்வயநமசியென்னும் பதத்தையும் யநமசிவவென்னும் பதத்தையும் அந்தந்தபதத்தின் நடுவெழுத்தைப் பிடித்துமாறஒவ்வொன்றிற்கும் (உரு) ஆக(௱உரு) மந்திரங்களாகும்.

ஆறுவரை நேரேகீறி ஆறுவரை குருக்கேகீறி (உரு) வீடுகளுள்ள ஐந்து சங்கரங்களமைத்து ஒவ்வொன்றிலும் மேற்சொல்லிய பஞ்சாட்சரத்தையும் உயிரெழுத்தையும் பீஜாட்சரத்தையும் லக்கம் (ருக)யும் அடைக்கவும் இந்த ஐந்தும் பஞ்சபூதச் சக்கரங்களாகவும் சிதம்பர சக்கரங்களாகவும் விளங்கும்.

ஓம்-ஆம்-ஊம்-ஸ்ரீம்-ரீம்-அங்-ரீங்-ஸ்ரீங்-சிவாயநமாவென்று சிவத்தியானஞ்செய்து நிஷ்டைகூடும் பெரியோர்கள் தன்னையுந் தலைவனையுங்கண்டு மகிழ்வுற்றுப்பரமபதமடைவார்கள்.

வேறு.

சுத்தநிற்குணப் பொருளாயிருக்கின்ற பஞ்சாட்சரத்தை பிரவணத்துடன் கூட்டித்தியானித்து மௌனமுற்று மனதை ஒருநிலைப்படுத்தி நிஷ்டைகூடினால் இருகதிரும் ஒன்றான முச்சுடர் முனைப்புருவ நடுச்சுழியில் சோதி பிரகாசிக்கும் ஆத்மதரிசனமும் பதிதரிசனமும் உண்டாகும்அப்போது ஜீவசைதன்னியம் பாசஇருளிலிருந்துநீங்கி பஞ்சமுகங்கலந்திருக்குஞ் சிவனைக்கூடிச் சிவானந்தத்தை அனு

பவிக்கும் சூரியனும் கிரணமும்போல சிவத்தைவிட்டு நீங்காதிருக்கின்ற பஞ்சசத்தி (தற்புருஷம்-அகோரம்-வாமதேவம்-சத்தியோசாதம்-ஈசானம்) களும் அந்தச்சிவத்துக்குத் திருமுகங்களாம். இந்தத் திருமுகங்களிற் செபிக்கும்மந்திரங்களை ஒவ்வொருமுகத்துக்கு (உகரு) ஆகமேலோர்உரைத்திருப்பதை இதனடியில் விபரிக்கப்படும்.

தற்புருஷமுகத்தில்

(உகரு) மந்திரத்தில்வரும் நல்வினை தீவினை.

சிவபஞ்சாட்சரம்.

யநவசிமவென்றுசெபிக்கில் அகோரமாகும் உற்பனமாகும்.

சௌமியபஞ்சாட்சரம்.

அங்-சிவாயநமாவெனில் காதலிக்கப் புத்திரசந்தானமுண்டாம்.

அரி-ஓம் நமசிவாயமெனில் தேகத்தில் நோயணுகாது.

அம்-கிலி சிவாயநமாவென்றால் யோகசித்தியுண்டாகும்

லங்-சிவாயநமாவென்றால் ஆயிசு விருத்தியுண்டாம்

இம்-ஏ சிவாயநமாவென்றால் ஓடாத பூதங்கள் ஓடும்.

ஓம்-கிலியும் நமச்சிவாயமென்றால் இராஜாக்கள் வசியமாவார்கள்.

ஆயிபஞ்சாட்சரம்.

மிறீயும்-ஓம் நமசிவாயமென்று செபிக்கில்சிவாகமமிருபத்தெட்டின்பலனைச்சொல்லக் கடாட்சமுண்டாம்.

ஐயும்-நமசிவாயமெனில் புத்திவித்தையுண்டாம்.

அமுதபஞ்சாட்சரம்.

சிவநமசிவாயமென்பதே அமுதபஞ்சாட்சரமாம்

நமசிவாயமெனில் நினைத்தவண்ணம் சித்தியாகும்.

நமசிவாய-ஊம்-நமசிவாயமெனில் குளிர்தோஷம் நாசமாகும்.

நமசிவாய-சூலிங்-நமசிவாயமெனில் நாட்டில் விளைபூமி நல்ல பலனைத்தரும்.

நமசிவாயமவ்வும்-நமசிவாயமெனில் அஷ்டநாகமுதலியசருவபாம்புகளின் விஷந்தீரும்.

ஓம், குசம், பிரேம், சிவாயநமாவெனில் பசுவு பாக்கியமுண்டாம்.

கண், சி, மிறி, சிவாயநமாவென்றால் பந்தனம்,கள்ளர்வாரார்.

ஓம், ஆம், ரும், சிவாயநமாவெனில் மோட்ச மெய்தும்.

அரிகர, நமசிவாய, ஓமெனில் தேகசித்தியாம்.

அவ்வும், நமசிவாயமென்றால் கயிலைவாழ் காயசித்தியுண்டாம்.

ஓம், நமசிவாயமெனில் சத்துருவின் காசினியைவெல்லலாம் புகழுண்டாம்.

லங், கிரியும், சிவாயநமாவென்றால் தொல்லுலகில் தானியங்கள் பெருகவுண்டாம்.

ஓம், சிரியும், ஓம், நமசிவாயநமாவெனில் கொடுத்தவரம் பலிக்கும்.

ஓம், ஊம், சிவாயநமாவெனில் குஷ்டம் பதினெட்டுந்தீரும்.

கிலீயும், சிவாயநமாவெனில் இலட்சுமிகளெல்லாம் வசியமாம்.

லிங், நமசிவாயமெனில் மெலிந்த தேகம் பாரிக்கும்.

ஓம், அங்கிஷ சிவாயநமாவெனில் தணல்வளர்த்துப் பிரவேசமாடலாம்.

தற்புருஷமுற்றிற்று.

அகோரமுகத்தில்வரும்
நல்வினை தீவினை.

துந்தும், மவயநசியென்றால் வித்தவேடனையாகும்.

ஓங், கங், மவயநசியென்றால் பூதலத்தில் அஷ்டசித்தி யுண்டாம்.

ஓம், மங், சங், சிவநமவென்றால் அன்னசித்தியுண்டாம்.

கிலீங், வங், சிவாயநமாவென்றால் செலஸ்தம்பமாகும்.

பரப்பிரம, ஓங், யங், சிவாயநமாவெனில் தரணிதனில் ரவி கண்டங்தோற்றும்.

சறவ, சறவ, நமசிவாயவென்றால் வருணசெலம் செல்வம் மிகும்.

ஓம், மங், சிவாயநமவென்றால் சமுத்திரங்கள் நதிகள்வற்றும்.

செங், செங், செங், செங், சிவாயவென்றால் தரணியில் எல்லோரும் வசியமாவார்.

ஓங்-மங்-செங்-சிவாயநமாவெனில் விஷங்களைத் தம்பித்துக் கொள்ளும்.

பிரமரிஷி பஞ்சாட்சரம்.

ஓங், அங்களவாயவென்றேதக் கடல்களைக் கடக்கலாகும்.

அங்கிஷ, ஓ, சிவாயநமாவெனில் வானிலுள்ள தெல்லாங் காணும்.

ஓங், சங், சிவாயநமாவெனில் தேவகன்னிகள் வலியவந்து சேருவார்கள்.

லம், அங்கிஷ, சிவாயநமவென்றால் முக்குணத்தை வெல்லலாம்.

டங்- கிவச்சனய, சிவாயநமாவென்று தியானிக்கில் பாதாள கெவுனமாகும்.

ஓங்-ஐயும்- சிவாயநமாவெனில் நால்வேதம் ஆறுசாஸ்திர மறியலாம்.

லிங்க-லிங்க-ஓம் சிவாயநமாவெனில் பொன்னுலகம் காணலாம்.

சங்-சங்- சிவாயநமாவெனில் செலஸ்தம்ப மெழுப்பலாகும் நினைத்த தெல்லாம் உருவாய் நின்று யேவல் கேட்கும்.

ஓம்- சிவாயநமாவெனில் அஷ்டகருமம் சித்தியாகும்.

சிரியும்-சிரியும்-சிவ-சிவா ஓமெனில் மேதினியிற்கேட்டதெல்லாங்கொடுக்கும்.

பிறங்-பிறங்-குசாப-சிங்-சிவாயநமாவெனில்காய்கனிகள்பறிக்கும்படி மரங்களெல்லாம் வளைந்துகொடுக்கும்.

மங்-மங்-நங்-சிவாயநமாவெனில் நாளிலேபொசிப்பதனைவெறுக்கலாகும்.

வங்-லங்-வங்-லங்-சிவாயநமாவெனில் மழையில் நனையாமல் நடக்கலாகும்.

அகார-ஓம்-ஙங்-ங்-ஙங்-சிரியுஞ்-சிவாயநமாவெனில்தேவனைக்காணலாம்.

இரிங்-சிரிங்-சிவாயநமாவெனில் ஆறுண்டாகும் பிரவாகமோடும்.

சமுத்திரபஞ்சாட்சரம்.

சி-யம்-சிவசிவா-உங் - உங்-சிவாயநமாவெனில் கடலினுருவோடும் நிறுத்தினாலங்கே நிற்கும்.

சங்-சங்-யவசிநமாவெனில் ஜலத்தில் நடக்கலாம்.

அகோரமுற்றிற்று.

வாமதேவ முகத்தில்வரும்

நல்வினை தீவினை.

பிலேயும்-பிலேயும்-சிவாயநமாவெனில் அடங்காத இசக்கிவந்தடிகீழ் விழ்வாள்.

றாங், றவ்வுஞ் சிவாயமெனில் வாமத்தைப் பொசிக்கலாம்.

ஓங்-கங்-கங்-ஐயும் சிவாயநமாவெனில் தேவர்களைக் காணலாம்.

ஐயும்-சிவாயநமவெனில் தேவவிமானம் வந்துநிற்கும்.

உங்-தெங்-கெங்-ஓங்-சிவயநம வெனில் தருக்கள் வந்துதவியாகும்.

கங்-கங்-ஊங்-கங்- நசி-ஓங் என்றால் காமதேனைப் புசிக்கலாம்.

செங்-செங்-சிவாய-வசங்-நமாவெனில்தேவசபைகாணலாம்

ங்-நுங்-சிங்-ஓநமாவென்றால் சத்தியுன்முன்வந்து நின்று இடர்தீர்த்துக் காற்பாள்.

ரவிகோடிகிரியும்-சிவாயசிவா என்னில் விஷ்ணுவின் மாயை தோணும்.

சங்-கிரியும்-தங்-சிவாநமாவென்றால்ஆதித்தன்ரதங்காணும்.

உங்-கங்-சவ்வும்-சிவாய-ஓங்-ஓங்-எனில் ஆத்மாவின் ஒடுக்கங்காணும்.

டெங்-டெங்-ஓங்-சிவாயசுவாகா, சுவாகாவெனில் பூமிக்குள் அடக்கங்காணும்.

ங-ங-ங-சிங்-சிவாயநமாவென்றால் இருண்டகடல் வெளியாய்க்காணும்.

சிரியுஞ் - சிரியும் - ஊங் - சிவாயநமாவென்றால் தேகத்தில் நடனஞ்செய்யும் நாயகனைக் கருவிக்குட் கண்ணுற்காணலாம்.

கெங்-கெங்-அவ்வுஞ்சிவாயநமாவேன்றால் ஆகாசகெவனமாகும்.

சிரியும்-கோஷய-கோஷய-சங்-சதாசிவாநமாவெனில் வேதமதைக்காணலாம்.

லங்-அங்கிஷ-ஊங்- சிவாயநமாவெனில் நினைத்தவிடத்துக்குச் செல்லலாம்.

ஓங்-நங்-நமசிவாய நமாவெனில் சித்தாந்தந் தெளிவாய்த் தோன்றும்.

கிலியும்-சிங்-சிங்-சிவாயநமாவெனில்அடுக்குகள் ஒடுக்கங்காணும்.

கங்-ஊங்-சிஷ-சிவாகா-மம்-சிவாநந்தசிவசிவாயநமாவெனில் அரவுகடித்தால் விஷமில்லை விஷமிறங்கும்.

சவ்வும், ஓங், சிவாயசுந்தராயி, என்றுசாற்ற சிறுபெண்கள் பெரியோராவார்.

சிவ ஓம், ரெயும், சிவாய ஓம்நமா, வெனில்சமத்தரெல்லாம் ஊமையாவார்.

கிலியும், மங், பங், சிவாயவென்று நோக்கினல் இந்திரனை யழைக்கலாம்.

வாமதேவமுற்றிற்று.

சத்தியோசாதமுகத்தில்வரும்

நல்வினை தீவினை.

பிறங், பிறங், சிவாய, ஓங், பிரசுவாகாவெனில் எழுவகைப் பிறவி நீங்கும் பிரேதத்தை யெழுப்பலாம்.

சிவாய, பேதன, மெனில் சத்துருக்க ளெடுபட்டோடுவார்கள்.

உங், உங், சிவாயநமாவெனில் காயசித்தியாகும்.

இருட்டின்ன, ஓம், சிவா, நமாவெனில் அண்ணல்முன் வரையை யெடுத்ததுபோல பெலமுடைத்தாய் வாழலாம்.

எங், இங், ஓங், சிவாயநமாவெனில் கண்ணோய் தீரும்.

யங், வங், யவசிமாவெனில் வரைகளைத் திஷ்டிக்கலாம்.

சிவாயநமாவெனில் அரனுடனே போர்வெல்லும்.

அங், இங், சிவாயஓமெனில் தேவேந்திரன் ரதம்வந்துமுன்னேநிற்கும்.

ஓங், ஓங், சிவாயஓங், எனில் வன்னியுடனாக்குத்தோற்றும்.

சியும், சியும், சிவாயசி ஓம்கிலியுமெனில்விடத்தைவெல்லும்.

றங், நங், அங், சிவாயநமாவென்றால் மாற்றான் அஞ்சியோடுவான்.

ஓங், சிங், சங், சிவ, சிவ, சிவாயநமாவெனில் மேகமண்டலத்துக்கு செல்லலாம்.

ஓங், இங், சங், சிவ, சிவாஎனில் தென்றலென்ற மாருதந்தெளிந்துகாணும்.

இங், குருங், கிலியும், சிவாய ஓமெனில் தேவேந்திரன் ஏவல் கேட்பான்.

ஓங், நங், சிவாயநமாவெனில் இறந்தவர்கள் எழுந்திருப்பார்கள்.

ஸ்ரீயும், உங், சிவாயநமா, வென்று தியானித்தோர்கட்கு மோட்சவீடெய்தும்.

அங்-ஊங்-சிவாயமென்றால் பரிமணங்கள் எங்கும் வீசும்.

இஷங்-இஷங்-சிவாய-ஓங் எனில் எங்கும் மங்கள தோற்றமாயிருக்கும்.

யங்-கிலியும்-சிவ-ஓம்-நமாவென்று தியானிக்கில்வெய்யோன் திக்கென்ற தோற்றங்காணும்.

நங்-மங்-அங்-சிங்-வங்-எங்- சிவாயநமாவெனில் ஒளிநயனத் தோற்றத்திலுண்மைகாணும்.

சியுங்-உங்-உங்-சிவ-சிவா-சி-யோவென்று தியானிக்கில் புக்ழோசைநிற்குமிடங் காணலாகும்.

ஓங்-சிங்-சிவாயசிங்-சிங்-ஓமெனில் அறுசுவையைக் காண லாம்.

கிலாங்-கிலியும்-கிலிவுங்-கிலிவுங்-கீலரா- சிவாயநமாவென்று ருச்செபிக்கசிதம்பர சொரூபமாகும்.

சத்தியோசாதமுற்றிற்று.

ஈசானமுகத்தில்வரும்

நல்வினை தீவினை.

இறி- யங்- நவு- ஓநமசிவாயமெனில் ஆளழைப்புவருவார் மெத்த.

சங்-சியும்-சிவமயநமாவெனில் ஆத்மதெரிசனமுண்டாம்.

ஆங்-சிவ-சிவாய-அவ்வுமெனில் சந்திராதி நல்கும்

சி-யுங்- உங்சிவாய- ஊங்- யம்-நம்- என்று ஓத தத்துவத்தின் தோற்றமெல்லாங்காணும்.

நமசிவாயநமா ஓங்-சி-ஓ-மென்றால் மூலாதாரங்காணும்.

யங்-சிங்-சிவாயநமாவெனில் சுவாதிட்டானந்தோன்றும்.

சிங்-ஐயுஞ்சுவாகாவெனில் பூரகத்தின் உறவுகாணும்.

லங்-லங்-வங்-சிவாயவென்று துதிக்கில் அனுகதத்தின் உண் மைகாணும்.

வங்-சிங் சிவாயநமாவெனில் அனுகதத்தை மகிழ்ந்து காட் டும்.

ஊங்-ஓங்-சிவாயநமாவென்றால் விசுத்தியைக்காணலாம்.

சிங்-சிங்-சிவாயநமாவென்றால் பேரின்ப ஆக்கினையைக்காண லாம்.

மங்-வங்-சிங்-ஓமென்றால் அண்டவடுக்கறியலாம்.

ஐயும்-கிலியும்-சவ்வுமென்றால் மேலான முனிவருட் தோற் றங்காணும்.

கிலியும்-சிரியும்-சிவாயவென்றால் பிரமாவைக்காணலாம்.

மங்-நங்-சிவ-செய-ஓங்-எனில் குருபாதம் சித்தியாகும்.

வங்-வங்-சிங்-ஓங்-சிவாயவென்றால் சினத்ததொருகாடு கடுந் தீயாய் வேகும்.

நங்-மங்-சிங்-வங்-யங் என்றால் விரையை மண்ணில் பிரட்ட வுடனே முளைத்துத்தானே காய்க்கும்.

சிங்-சிங்-சிவாயமெனில் திரிகால ஞானமுண்டாம்.

இங்-எங்-உங் சிவாயவெனில் பலவிமாய்த்தோணுகிற மாயைபோம்.

சிவாயநம ஓமென்றால் வரைகளையெல்லாந் தூளாகப்பொடிக்கலாம்.

நமசிவ ஓமெனில் ரவியும் சோமனும் ஒன்றாகும்.

வயசிநம ஓமென்றால் மறலிவந்து முன்னின்று வார்த்தை கேட்பான்.

சிவாயநம ஓமெனில் மனோன்மணி வாசலில் வந்துகாப்பாள்.

நயவசிமாசுவாகாவென்று ஓதிட இலட்சுமிவந்து குளிகையீய்வாள்.

வங்-சிங்-யங்- சிவாயமென்றால் அறுபத்துநாலுசித்து மெய்தம்.

வங்-சிங்-யங்- சுவாகாவென்றால் பூலோகத்தரசர்வந்துபோற்றிநிற்பார்.

யங்-சங்-சிங்- ஓம்சிவாயநமாவெனில் கனதனராசர்கள்வந்து வணங்குவார்கள்.

ஈசானமுற்றிற்று

சத்திசிவதீட்சை விபரம்.

முதற்றீட்சையாவது அவ்-சிவயநமாவென்று மனதொருமையுடன் மௌனமாய்த் தியானிக்கில் சிவசத்தி கருணையுண்டாம்.

இரண்டாந்தீட்சை உவ், வயநமசி யென்றால் இதையகமலத்தில் உலகெலாம் நிறைந்த ஜோதிகாணும்.

மூன்றாந்தீட்சை லம்-யநமசிவ என்றால் இரவியும், மதியுமொன்றாகிப் புருவநடுச்சுழியில்கற்பூரதீபம்போலச் சோதி பிரகாசிக்கும்.

நான்காந்தீட்சை சும் நமசிவய வென்று இரேசித்துப் பூரித்து வாசி ஏறிவிண்ணொளியை நோக்கித் தியானித்தால் மெஞ்ஞான சிவசொரூபந்தானாயாவன்.

ஐந்தாந்தீட்சை டம் மசிவயந வென்று மௌனமாயுன்னி வாசியைச் சமரசப்படுத்தி தியானித்து உருச்செய்தால் பஞ்சகருத்தா தரிசனமாகும்.

ஆறாந்தீட்சை ரம் சிம் சிவயசிம் என்றுமுறையே இரேசித்து கும்பித்து பூரித்து தியானித்தால் மெஞ்ஞானதீபம் பிரகாசிக்கும் ஆறுதாரந்தோன்றும் அமுதம்பாயும் தேகசித்தி யோகசித்தியுண்டாம்.

ஏழாந்தீட்சை ஓம்நமசிவயவென்றுமனங்குவிந்து வாசிபூண்டு-புருவநடுச்சுழியைநோக்கி தியானித்தால் அம்பலவர் அருளுண்டாம்.

எட்டாந்தீட்சை, தம், அம், ரங், ரீங் என்று மனதறிவாலுருச்செய்யத் தத்துவஞ் சுத்தமாகி அஷ்டசித்துண்டாம் அடிநடுமுடியாய்நின்ற அம்பலவர் அருள்பெருகும்.

ஒன்பதாந்தீட்சை, கம், ரீங், சிம், சிவ என்று அந்திசந்தி பக்தியுடன் ஒருமனதாய்த் தியானிக்கில் நவக்கிரகஞ் சுத்தமாகி வேதாகமப்பொருள் விளக்கமாகும்.

பத்தாந்தீட்சை, அம், உம், சிவ, சிவ, என்று தியானித்தால் சகலநிறைந்த காட்சிகளெல்லாங் கண்ணிற்காணும். ௲அ, இதழ்க்கமலத்தி லிருந்தமுதம்பாயும் அதையருந்தப் போதமாகும்.

பதினொன்றாந்தீட்சை, சிம், சிரீங், சிம், என்று புருவநடுச்சுழியைநோக்கி மனக்கண்ணாற்பார்த்து உருச்செய்யப் பஞ்சபூதம் நிலைதவறாமல் நிற்கும், மதிபெருகி ரவியிற்கூடும் சிவயோகியாவன்.

சத்திசிவதீட்சை முற்றிற்று.

மலையாள மாந்திரீகபோதினி முற்றிற்று.

மலையாள வயித்திய சாஸ்திரம்	1	0	0
மலையாள மாந்திரீகபோதினி	0	4	0
மலையாள ரிணவாகடம் மூலமும் உரையும்	0	4	0
சுதேச கைத்தொழில் சாஸ்திரம்	1	0	0
சுகந்த பரிமள சாஸ்திரம்	0	8	0
யூநானி அநுபோக வயித்தியம்	0	8	0
பிரபஞ்ச வுற்பத்தி	2	0	0
சண்டாளர் சகவாசம்	0	8	0
அகடவிகட சம்சாரி	0	4	0
நவக்கிரக படம் பெரிசி	0	2	0
காசிபடம்	0	1	0
1008 சிவலிங்கப்படம்	0	4	0

மலையாளம் புக்டிபோ,

சி. யம். நடராஜமுதலியார் மானேஜர்,

பெரம்பூர் பாரெக்ஸ்,

மதிராஸ்.